# விழுப்புரம் நகராட்சி

**2020–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31–ம் தேதி திங்கட்கிழமை காலை 10.15 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற **“சாதாரண கூட்ட”** நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **ந.தட்சணாமூர்த்தி, பி.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## மன்றப்பொருள்

**1.** இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரது ஜுலை 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம். ( / /சி1)

**2.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் டாடா ஏஸ் வாகனத்திற்கு TN-32-AC-0735 க்கு வாகன தகுதி சான்று முடிவடைந்து விட்டதால் இவ்வாகனத்தை பழுது நீக்கம் செய்ய உத்யேச செலவினம் ரூ90,000/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மேற்கண்ட பணியினை அங்கீகரக்கப்பட்ட பணிமனையின் மூலம் பழுது நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம், பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்ய அங்கீகரிக்கப்பட்ட VST Service Station நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(167/2020/எச்2)

**3.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் டாடா ஏஸ் வாகனத்திற்கு TN-32-AC-0735 க்கு வாகன தகுதி சான்று முடிவடைந்து விட்டதால் இவ்வாகனத்தை பழுது நீக்கம் செய்ய உத்தேச செலவினம் ரூ90,000/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகள் பாதிக்கப்படாமலிருக்க, விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றது.

| வ. எண் | விவரம் | Company Name | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Ragavendra Motors, Villupuram | | Anbu Auto Garage, Villupuram | | Sri Latha Auto Motor Works, Villupuram | |
| | | MaterialA mount | Labour | Material Amount | Labour | Material Amount | Labour |
| 1 | Engine Oil service | 4500 | 1000 | 2800 | 600 | 3800 | 800 |
| 2 | Gear crown oil change(plate cading) | 2500 | 500 | 1500 | 400 | 2000 | 500 |
| 3 | Rear &Front road spring R/C | 13000 | 5000 | 8000 | 2500 | 12000 | 4500 |
| 4 | Rear Bumped change | 1800 | 500 | 1000 | 400 | 1500 | 500 |
| 5 | Air Filtre change | 6800 | 1000 | 5300 | 500 | 6000 | 800 |
| 6 | Hydraulic Oil change | 5000 | 2300 | 4000 | 1700 | 4900 | 2000 |
| 7 | For Wheel Gril packing | 4900 | 2300 | 4200 | 1700 | 4800 | 2000 |
| 8 | Tinkering Work | 2500 | 1000 | 1500 | 800 | 2000 | 1000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | Painting work | 7500 | 3800 | 6800 | 2800 | 7000 | 3000 |
| 10 | Electrical work | 3500 | 1500 | 2500 | 1000 | 3000 | 1400 |
| 11 | Battory Change | 5500 | 600 | 4900 | 300 | 5200 | 500 |
| 12 | Rim Tyre Change | 8700 | 1000 | 7700 | 500 | 8900 | 1000 |
| 13 | Wheel Alignment | - | 950 | | 700 | | 800 |
| | GST | | - | 9436 | 2502 | | |
| | | **66200** | **21450** | 59636 | 16402 | **61100** | **18800** |
| **TOTAL** | | **87650** | | **76038** | | **79900** | |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட அனைத்து இனங்களிலும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Anbu Auto Garage, Villupuram என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மன்ற அனுமதி எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(167/2020/எச்2)

**4.** விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வரை உள்ள வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகள் மொத்தம் 6366 எண்ணிக்கையாகும். தினசரி தெருவிளக்குகள் குறித்து பொதுமக்களிடமிருந்து வரப்படும் புகார்களை நிவர்த்தி செய்வதற்கு நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாததால், உடனுக்குடன் புகார்களை சரிசெய்ய முடியவில்லை. எனவே, இப்புகார்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கு Electrician Gr–II–7 பணியாட்களை தனியார் ஒப்பந்ததாரரின் மூலமாக 9 மாதக்காலத்திற்கு பணியில் அமர்த்த ஏற்படும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.85 இலட்சம் செலவினத்தை நகர மன்ற தீர்மான எண்.1652, நாள்.31.05.2019–ல் மன்ற அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து, 13.09.2019–ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (மதிப்பீட்டை விட –0.43%) ரூ.**9,69,990**/–ஐ அளித்துள்ளதை நகர மன்ற தீர்மான எண்.1796, நாள்.20.09.2019–ல் மன்ற அனுமதி வழங்கியுள்ளதால் 9 மாதக் காலத்திற்கு (13.09.2019 முதல் 31.05.2020 வரை) கீழ்கண்ட பட்டியலில் உள்ள பணியாளர்களுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாட்களின் எண்ணிக்கை | மாத விபரம் | ஊதியம் விபரம் ரூ. |
|---|---|---|---|
| 1 | 5 | செப்டம்பர்–2019 | 39,525 |
| 2 | 5 | அக்டோபர்–2019 | 69,750 |
| 3 | 6 | நவம்பர்–2019 | 71,610 |
| 4 | 6 | டிசம்பர்–2019 | 83,700 |
| 5 | 6 | ஜனவரி–2020 | 75,330 |
| 6 | 7 | பிப்ரவரி–2020 | 94,395 |
| 7 | 7 | மார்ச்–2020 | 1,00,905 |
| 8 | 6 | ஏப்ரல்–2020 | 83,700 |
| 9 | 6 | மே–2020 | 83,700 |
| | | **மொத்தம்** | **702615** |

மேற்கண்ட பணியாளர்களுக்கு 13.09.2019 முதல் 31.05.2020 வரையிலான 9 மாதக் காலத்திற்கு தொகை ரூ.7,02,615/– செலவிடப்பட்டுள்ளது போக மீதமுள்ள தொகை ரூ.2,67,375/– உள்ளது.

தற்பொழுது ஒப்பந்தக்காலம் முடிவடையும் நிலையில் தெருவிளக்கு பணியாளர்களை கோவிட்–19 தடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருவதால் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரர் திருமதி.C.வள்ளி என்பவர் மேலும் மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்திடவும், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி பணி செய்திடவும் கடிதம் அளித்துள்ளார். எனவே, நிர்வாக நலன் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஜீன், ஜுலை மற்றும் ஆகஸ்டு 2020 வரையிலான 3 மாதக் காலத்திற்கு ஒப்பந்ததாரர் திருமதி.C.வள்ளி என்பவருக்கு பணி நீட்டிப்பு செய்து பணி ஆணை வழங்கிடவும், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி மீதமுள்ள தொகை ரூ.2,67,375/–லிருந்து 3 மாதக் காலத்திற்கு செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து பணி ஆணை வழங்கியதையும், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி மீதமுள்ள தொகை ரூ.2,67,375/–லிருந்து 3 மாதக் காலத்திற்கு செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5761/2019/இ2)

**5.** விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளிலும் தெருவிளக்கு பராமரித்தல், தலைநீரேற்று நிலையமான எல்லீஸ்சத்திரம் மற்றும் பில்லூர் பகுதியில் மின்மோட்டார் மற்றும் வால்வு இயக்குதல் மற்றும் குடிநீர் கசிவினை சரி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சியில் போதிய பணியாட்கள் இல்லாததால் நகராட்சியின் அத்தியாவசிய பணிகள் தடைபடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, நகராட்சியின் பணிகள் பாதிப்படையா வண்ணம் மேற்கண்ட பணிகளுக்கு Electrician Gr–II – 3 நபர்களும், Helper–3 நபர்கள் மற்றும் Plumber Gr-II – 2 நபர்கள் ஆக மொத்தம் – 8 பணியாட்களை தனியார் ஒப்பந்ததாரரின் மூலமாக 9 மாதக்காலத்திற்கு பணியில் அமர்த்த ஏற்படும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.70 இலட்சம் செலவினத்தை நகர மன்ற தீர்மான எண்.1654, நாள்.31.05.2019–ல் மன்ற அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து, 13.09.2019–ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (மதிப்பீட்டை விட –0.36%) ரூ.**9,56,500**/–ஐ அளித்துள்ளதை நகர மன்ற தீர்மான எண்.1797, நாள்.20.09.2019–ல் மன்ற அனுமதி வழங்கியுள்ளதால் 9 மாதக் காலத்திற்கு (13.09.2019 முதல் 31.05.2020 வரை) கீழ்கண்ட பட்டியலில் உள்ள பணியாளர்களுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாட்களின் எண்ணிக்கை | மாத விபரம் | ஊதியம் விபரம் ரூ. |
|---|---|---|---|
| 1 | 9 | செப்டம்பர்–2019 | 66,106 |
| 2 | 10 | அக்டோபர்–2019 | 1,26,130 |
| 3 | 6 | நவம்பர்–2019 | 74,940 |
| 4 | 6 | டிசம்பர்–2019 | 75,405 |
| 5 | 6 | ஜனவரி–2020 | 75,405 |
| 6 | 6 | பிப்ரவரி–2020 | 74,240 |
| 7 | 6 | மார்ச்–2020 | 75,937 |
| 8 | 6 | ஏப்ரல்–2020 | 72,205 |
| 9 | 6 | மே–2020 | 74,300 |
| | | **மொத்தம்** | **7,14,668** |

மேற்கண்ட பணியாளர்களுக்கு 13.09.2019 முதல் 31.05.2020 வரையிலான 9 மாதக் காலத்திற்கு தொகை ரூ.7,14,668/– செலவிடப்பட்டுள்ளது போக மீதமுள்ள தொகை ரூ.2,41,832/– உள்ளது.

தற்பொழுது ஒப்பந்தக்காலம் முடிவடையும் நிலையில் குடிநீர் பணியாளர்களை கோவிட்–19 தடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருவதால் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரர் திருமதி.C.வள்ளி என்பவர் மேலும் மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்திடவும், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி பணி செய்திடவும் கடிதம் அளித்துள்ளார். எனவே, நிர்வாக நலன் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஜீன், ஜுலை மற்றும் ஆகஸ்டு 2020 வரையிலான 3 மாதக் காலத்திற்கு ஒப்பந்ததாரர் திருமதி.C.வள்ளி என்பவருக்கு பணி நீட்டிப்பு செய்து பணி ஆணை வழங்கிடவும், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி மீதமுள்ள தொகை ரூ.2,41,832/–லிருந்து 3 மாதக் காலத்திற்கு செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து பணி ஆணை வழங்கியதையும், ஏற்கனவே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி மீதமுள்ள தொகை ரூ.2,41,832/–லிருந்து 3 மாதக் காலத்திற்கு செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5760/2019/இ2)

**6.** விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பஞ்சாயத்து பகுதிகளில் உள்ள 1).சாலாமேடு 2).சாலாமேடு இ.பி.காலனி 3).காகுப்பம் இந்திரா நகர் 4). திருக்குறிப்பு தொண்டர் நகர் 5).வழுதரெட்டி இந்திரா நகர் 6).வழுதரெட்டி பாளையம் 7).வழுதரெட்டி அங்கன்வாடி அருகில் 8).NGGO காலனி 9).எம்.குச்சிப்பாளையம் 10).மணி நகர் 11).பானாம்பட்டு மாரியம்மன் கோவில் 12).ஆசிரியர் நகர் 13).பானாம்பட்டு மற்றும் 14).ராகவன்பேட்டை ஆகிய 14 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மேற்கூரை தளம் உடைந்துள்ளதையும், தரைத்தளம் மற்றும் தூண்கள் சேதமடைந்துள்ளதையும் சீரமைக்கும் பணிக்கு ரூ.**9.80** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **17.06.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | ரூ.9,52,515/– | 0.09% குறைவு |
| 2 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | ரூ.9,64,998/– | 1.22% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **0.09%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(3364/2020/இ2)**

**7.** விழுப்புரம் நகராட்சிப் பகுதிகளில் முதல் நிலை குப்பை சேகரித்தல் பணி மேற்கொள்ள **161** தூய்மை பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலமாக ஈடுபடுத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.**32976**/J3/2018, நாள்.**04.01.2019**–ல் அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த M/S கிரீன் வாரியர், திருவள்ளூர் நிறுவனத்தாருக்கு இவ்வலுவலக பணி உத்தரவு ந.க.எண்.**5316/2018/எச்1**, நாள். **30.05.2019**–ல் இந்நகராட்சியில் தூய்மை பணியாளர்களை தினசரி துப்புரவு பணியில் ஈடுபடுத்தும் பணி **01.07.2019** முதல் **30.06.2020** வரை ஒரு வருட காலம் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்காணும் பணி **30.06.2020**ல் முடிவடைவதால் விழுப்புரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள தூய்மை பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிக்கான ஒப்பந்தத்தை புதுப்பித்து கால நீட்டிப்பு செய்ய மேற்கண்ட நிறுவனத்தால் கோரப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவில் (K.Dis No.32976/J3/2018 நாள் . **04.01.2019) 3** ஆண்டுகளுக்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் பணி உத்தரவில் பணி திறனாய்வு செய்து மன்ற அனுமதி பெற்று , இரண்டாம் ஆண்டிற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும், ஏற்கெனவே உள்ள விலை விகிதத்தில் **10%** உயர்த்தி வழங்கவும் **30.05.2019** நாளிட்ட செயல்முறை உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக செய்து வருவதால் தற்சமயம் கொரோனா வைரஸ் தொற்று நோய் நகராட்சி பகுதியில் பரவலாக உள்ளதாலும், தூய்மை பணிகள் பாதிக்காமல் இருக்கவும், மேலும் ஓராண்டிற்கு **(01.07.2020** முதல் **30.06.2021** வரை) ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யலாம். மேலும் ஏற்கெனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் **2018–2019** ஆம் ஆண்டிற்கு தினக்கூலியாக ரூ.**376/–** நிர்ணயம் செய்யப்பட்ட விகிதத்தில் தூய்மை பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. தற்போது **2019–2020** ஆம் ஆண்டிற்கான தினக்கூலியாக ரூ**405/–** நிர்ணயம் செய்யப்பட்டதால் கூடுதல் செலவினம் வழங்கப்படவேண்டியுள்ளதாலும், மேலும் EPF, ESI, சீருடை மற்றும் தளவாட சாமான்கள் வழங்க வேண்டியுள்ளதாலும் மதிப்பீட்டினை விட **10%** கூடுதலாக வழங்கவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ**325.00** இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**8.** விழுப்புரம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு (COVID-19) கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் கை சுத்திகரிப்பான் கிருமி நாசினி (Sanitizer) 750ml கொண்ட பாட்டில்கள் **20** எண்ணிக்கையில் **1** பாட்டில் ரூ **750** வீதம் வழங்கிடவும் அதற்கான தொகை ரூ**15000/–**ஐ அம்மா மகளிர் சுய உதவிக்குழு இருவேல்பட்டு வழங்கிடவும், மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண். அ**1/125/2020** COVID-19 நாள். **05.2020** உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட குழு மூலம் கிருமி நாசினி கொள்முதல் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் ரூ.**15,000/–** ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று அம்மா மகளிர் சுய உதவிக்குழு இருவேல்பட்டு அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். **(2116–21/2020/எச்1)**

**9.** இந்நகராட்சிக்கு சொந்தமான TN32-AB-3276 பொலிரோ ஈப்பு வாகனம் நகராட்சி பொறியாளரின் அலுவலகப் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி வாகனத்திற்கு புதியதாக நான்கு டயர்கள் வாங்கி பொருத்தவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.31,500/—த்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(4601/2020/இ2)**

**10.** விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தின் ஆணையர் மற்றும் பொறியாளர் அறைகளில் இன்வர்டர் மற்றும் பேட்டரி பொருத்த ரூ.28,560/—க்கு உள்ளூர் ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரியதில் 06.07.2020 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | ஒப்பந்ததாரரின் பெயர் (2) | விலைப்புள்ளி ரூ. (3) |
|---|---|---|
| 1 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | ரூ.28,560— |
| 2 | திரு.K.தஷ்ணாமூர்த்தி, ஒப்பந்ததாரர். | ரூ.29,680— |
| 3 | M/s KSR Co., ஒப்பந்ததாரர். | ரூ.30,464— |

**அலுவலக குறிப்பு:—**

1. வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் திருமதி.C.வள்ளி ஒப்பந்ததாரர் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4083/2020/இ2)**

**11.** விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு தேவையான திரவ குளோரினை சேமித்து வைப்பதற்கு HDPE Tank—க்கும், இதனை வைப்பதற்கு Stand மற்றும் Gate Valve ஆகியவற்றை சப்ளை செய்யும் பணிக்கு ரூ.2.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 14.07.2020—ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.2,26,744/— | 0.13% குறைவு |
| 2 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.2,29,168/— | 0.94% அதிகம் |

**அலுவலக குறிப்பு:—**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.13% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4226/2020/இ2)**

**12.** விழுப்புரம் நகராட்சியில் பாதாள சாக்கடை ஆள்இறங்கும் தொட்டியினை சாலையின் மட்டத்திற்கேற்ப சரிசெய்யும் பணிக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 15.07.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.3,41,714/– | 0.15% குறைவு |
| 2 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.3,47,184/– | 1.45% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இராஜா ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.15% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4426/2020/இ3)

**13.** இந்நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பொறியாளரின் TN 32 AB 3276 பொலிரோ ஈப்பு வாகனத்திற்கு 4 புதிய டயர்கள் பொருத்த ரூ.31,500/–க்கு தனி அலுவலர் 15.07.2020–ல் முன்அனுமதி வழங்கியதை தொடர்ந்து, உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரியதில் 22.07.2020 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் (1) | நிறுவனத்தின் பெயர் (2) | விலைப்புள்ளி ரூ. (3) |
|---|---|---|
| 1 | MRV Wheel Alignment Centre,<br>நெ.3/497 திருச்சி மெயின்ரோடு, விழுப்புரம். | ரூ.31,500– |
| 2 | Sakthi Tyres,<br>நெ.280/10 திருச்சி மெயின்ரோடு, விழுப்புரம். | ரூ.31,600– |
| 3 | Sri Palaniappa Tyre Retreading Co.,<br>நெ.42 மாம்பழப்பட்டு ரோடு, விழுப்புரம். | ரூ.31,800– |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் MRV Wheel Alignment Centre நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4601/2020/இ1)

**14.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.14 நாயக்கன் தோப்பில் அமைந்துள்ள காமராஜர் நகராட்சி ஆரம்பப்பள்ளி மற்றும் நுண்உர செயலாக்க மையத்தின் நுழைவு வாயிலில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.6.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.07.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | ரூ.6,57,015/– | 0.18% குறைவு |
| 2 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | ரூ.6,66,517/– | 1.27% அதிகம் |

**அலுவலக குறிப்பு:—**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இரத்தினசபாபதி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.18% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (2925/2020/இ1)

**15.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.27 வழுதரெட்டியில் உள்ள பொதுகழிப்பிடத்திற்கு தேவையான அளவிற்கு கழிவுநீர் தொட்டி கட்டுதல் மற்றும் கழிப்பிடத்தினை பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.07.2020—ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.R.பிரமிளா, ஒப்பந்ததாரர். | ரூ.6,36,257/— | 0.14% குறைவு |
| 2 | திரு.P.கணேசன், ஒப்பந்ததாரர். | ரூ.6,44,451/— | 1.15% அதிகம் |

**அலுவலக குறிப்பு:—**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.R.பிரமிளா ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.14% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (4070/2020/இ1)

**16.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 42 வரை வார்டுகளில் உள்ள சொத்துவரி விதிப்புகளில் காலம் கடந்த நிலுவை கேட்புகள் மற்றும் வசூலிக்க இயலாத நிலையில் உள்ள சொத்துவரி விதிப்பு குறித்து, வருவாய் உதவியாளர்கள் முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கள் துறை சென்னை, அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை நாள்.12.07.2017 நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர், அவர்களின் ஆய்வு அறிவுரையின்படி நகராட்சியில் உள்ள அனைத்து சொத்து வரி விதிப்புகளுக்கும் மறு அளவீடு (Remeasurement) செய்து சொத்து வரி குறையாக உள்ள இணங்களை கணினியில் புதிதாக சொத்து வரி விதிப்பு செய்து வரி உயர்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து கணினியில் பழைய சொத்து வரி விதிப்பு எண்களுக்கு வரி உயர்வு செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டபின்பு பழைய சொத்து வரி விதிப்பு எண்களுக்கு சொத்து வரி உயர்வு செய்யப்பட்டது. ஆனால், கணினியில் புதிதாக சொத்து வரி விதிப்பு செய்யப்பட்ட எண்கள் நீக்கம் செய்யப்படாமல் தொடர் கேட்பு எழுப்பபட்டு வருகிறது. பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டப்படும் போது மாதந்திர பட்டியலின் படி புதிய வரி விதிப்பு செய்யப்பட்டு பழைய வரி விதிப்பு எண்கள் இரத்து செய்யப்படாமல் விடுபட்டுள்ளதால், ஒரே கட்டிடத்திற்கு தொடர்ந்து பழைய சொத்து வரிவிதிப்பு மற்றும் புதிய சொத்து வரி விதிப்பு எண் இரண்டு வரி விதிப்புகள் தொடர்ந்து வருவதாலும், நீக்கம் செய்ய வேண்டிய பழைய வரி விதிப்பிற்க்கான தொகையினை வசூலிக்க இயவில்லை எனவும், ஒருசில வரி விதிப்புகள் உள்ள கட்டிடத்தினை இடித்து வழிநடைபாதையாகவும் மற்றும் ஒருசில வரி விதிப்பு கட்டிடத்தினை வழிபாட்டு தலமாக பயன்பாட்டில் உள்ளதாகவும், ஒருசில வரி விதிப்பு கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. ஒருசில சொத்துவரி விதிப்பு எண்களுக்கு சம்மந்தப்பட்ட இடங்களில் கட்டிடங்கள் ஏதும் இல்லை மற்றும் வரி விதிப்பு தொடர்பாக அப்பகுதியில் விசாரணை செய்ததில் வரி விதிப்பு தொடர்பாக விவரம் ஏதும் பொதுமக்களுக்கு தெரியாததாலும் சொத்து வரியினை வசூலிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை வசூலிக்க அறிக்கை வழங்கி ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளவோ அல்லது நீதிமன்றம் மூலமாகவோ சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவோ இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் வருவாய் உதவியாளர்கள் வார்டு வாரியாக, சொத்துவரி விதிப்பு வாரியாக வரி வசூலிக்க முடியாத நிலுவை தொகை சொத்துவரி ரூ.21,16,245/– மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.2,10,435/– (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) மற்றும் காலிமனைவரி ரூ.2,52,002/– (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) ஆக மொத்தம் ரூ.23,68,247/– மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.2,10,435/– நிலுவையாக இருந்து வருகிறது. ஜப்தி நடவடிக்கைகளோ, நீதிமன்ற மூலமாக வழக்கு தொடரவோ இயலாத நிலையில் உள்ள மேற்படி நிலுவைத் தொகைகளை வஜா செய்ய வேண்டி வருவாய் உதவியாளர்களால் வருவாய் ஆய்வருக்கு பரிந்துரை செய்யப்பட்டது. வருவாய் உதவியாளர்களின் குறிப்பின் மீது வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் அலுவலர் ஒவ்வொரு கட்டிடத்திற்கான சொத்துவரி விதிப்புகளையும் நேராய்வு செய்து கீழ் காணும் விவரப்படி குறிப்பு வழங்கியுள்ளார்.

1. வார்டு எண் 1 முதல் 42 வரை உள்ள பகுதிகளில் 60 சொத்துவரி விதிப்பு எண்களுக்கு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) அனைத்தும் வருவாய் உதவியாளர் குறிப்பில் கண்டுள்ளபடி நகராட்சியில் உள்ள அனைத்து சொத்து வரி விதிப்புகளுக்கும் மறு அளவீடு (Remeasurement) செய்து சொத்து வரி குறைவாக உள்ள இணங்களை கணினியில் புதிதாக சொத்து வரி விதிப்பு செய்து வரி உயர்வு செய்யப்பட்டது அதனை தொடர்ந்து கணினியில் பழைய சொத்து வரி விதிப்பு எண்களுக்கு வரி உயர்வு செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டாபின்பு பழைய சொத்து வரி விதிப்பு எண்களுக்கு சொத்து வரி உயர்வு செய்யப்பட்டது அனால் கணினியில் புதிதாக சொத்து வரி விதிப்பு செய்யப்பட்ட எண்கள் நீக்கம் செய்யப்படாமல் தொடர் கேட்பு எழுப்பபட்டு எழுப்பப்பட்டு வருவதால் இதனை வசூலிக்க வழி வகை இல்லாததால் ரூ.6,27,306/–மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.1,04,970/–ஐ ஆக மொத்தம் ரூ.7,32,276/–ஐ வஜா செய்யலாம்.

2. வார்டு எண் 1 முதல் 42 வரை உள்ள பகுதிகளில் 47 சொத்துவரி விதிப்பு எண்களுக்கு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) அனைத்தும் வருவாய் உதவியாளர் குறிப்பில் கண்டுள்ளபடி சம்மந்தப்பட்ட இடங்களில் கட்டிடங்கள் ஏதும் இல்லை. மேலும், வரி விதிப்பு தொடர்பாக அப்பகுதியில் விசாரணை செய்ததில் வரி விதிப்பு தொடர்பாக விவரம் ஏதும் பொதுமக்களுக்கு தெரியாததாலும், மேற்காணும் வரி விதிப்பு எண்களுக்கு தொடர் கேட்பு எழுப்பப்பட்டு வருவதால் இதனை வசூலிக்க வழி வகை இல்லாததால் ரூ.4,07,648/–மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.35,100/–ஐ ஆக மொத்தம் ரூ.4,42,748/–ஐ வஜா செய்யலாம்.

3. வார்டு எண் 1 முதல் 42 வரை உள்ள 112 சொத்துவரி விதிப்பு எண்களுக்கு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) பழைய கட்டிடத்தினை இடித்துவிட்டு அதே இடத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பு செய்யும் பொழுது பழைய வரி விதிப்பு எண் இரத்து செய்யப்படாமல் புதிய வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதால் இரண்டு வரி விதிப்புகள் வருவதாலும், பழைய வரி விதிப்பு தொடர்ந்து வருவதாலும் இதனை வசூலிக்க வழிவகை இல்லாததால் ரூ.8,78,040/– மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.59,025/–ஐ ஆக மொத்தம் ரூ.9,37,065/–ஐ வஜா செய்யலாம்.

4. வார்டு எண் 1 முதல் 42 வரை உள்ள பகுதிகளில் 11 சொத்துவரி விதிப்பு எண்களுக்கு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) அனைத்தும் வருவாய் உதவியாளர் குறிப்பில் கண்டுள்ளபடி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்டிருந்த வீடுகள் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் போது இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. மேலம் ஒருசில கட்டிடத்தினை இடித்து நடைபாதையாகவும் மற்றும் வழிபாட்டு தலமாகவும் உள்ள வரி விதிப்பு எண்கள் நீக்கம் செய்யாமால் தொடர் கேட்பு எழுப்பப்பட்டு வருவதா இதனை வசூலிக்க வழி வகை இல்லாததால் ரூ.2,03,251/–ஐ மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.11,340/–ஐ ஆக மொத்தம் ரூ.2,14,591/–ஐ வஜா செய்யலாம். என வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் அலுவலர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

5. வார்டு எண் 1 முதல் 42 வரை உள்ள 29 காலி மனை வரி விதிப்பு எண்களுக்கு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது). காலி மனையில் கட்டிடம் கட்டி புதிய வரி விதிப்பு செய்யப்படும் பொழுது காலி மனை வரி நீக்கம் செய்யப்படாமலும் தொடர்ந்து வருவதால் இதனை வசூலிக்க வழிவகை இல்லாததால் ரூ.1,42,587/—ஐ வஜா செய்யலாம்

6. வார்டு எண் 1 முதல் 42 வரை உள்ள பகுதிகளில் 25 காலி மனை விதிப்பு எண்களுக்கு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) அனைத்தும் வருவாய் உதவியாளர் குறிப்பில் கண்டுள்ளபடி சம்மந்தப்பட்ட இடங்களில் காலிமனை விதிப்புதாரர்கள் பெயரில் காலிமனைகள் ஏதும் இல்லை. மேலும், மேற்காணும் வரி விதிப்பு தொடர்பாக அப்பகுதியில் விசாரணை செய்ததில் வரி விதிப்பு தொடர்பாக விவரம் ஏதும் பொதுமக்களுக்கு தெரியாததாலும், மேற்காணும் வரி விதிப்பு எண்களுக்கு தொடர் கேட்பு எழுப்பப்பட்டு வருவதால் இதனை வசூலிக்க வழி வகை இல்லாததால் ரூ.1,09,415/—ஐ வஜா செய்யலாம் என வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் அலுவலர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.75380/94/ஆ1, நாள்.20—01—2000—ன் படி, அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடித (பத்தாண்டு) எண்.393, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை, நாள்.12.07.2000—ன் அறிவுரைகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.44457/2000/டி3, நாள்.31.07.2000—ன்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 18—02—2020 நாளிட்ட ஆய்வு கூட்டத்தில் “All erroneous demand should be written off / deleted before 15.03.2020 with approval of council” என்று தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்கவும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் பல்வேறு ஆய்வு கூட்டங்களில் சொத்து வரி இனங்களில் காணப்படும் தவறான கேட்புகளை நீக்கம் செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங் வசூலிக்கப்படாத காலம் கடந்த வரியினங்கள் மற்றும் வசூலிக்க இயலமால் உள்ள நிலுவை தொகையினை தள்ளுபடி செய்வதற்கு 1920—ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் பிரிவு 118—ன் கீழ் நகர் மன்றத்திற்கே அதிகார உள்ளதன் அடிப்படையில் ஜப்தி நடவடிக்கையோ, நீதிமன்ற வழக்கு தொடுத்தோ வசூலிக்க இயலாத நிலையில் உள்ள கீழ் காணும் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி நிலுவை தொகை ரூ.23,68,247/— மற்றும் திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.2,10,435/—ஐ வஜா (write off) செய்தும் மற்றும் சொத்துவரி விதிப்பினை நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வருடம் | சொத்து வரி தொகை | திடக்கழிவு மேலாண்மை கட்டணம் | காலிமனை விரி தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1986—1987 | | | 46 | 46 |
| 1987—1988 | | | 156 | 156 |
| 1988—1989 | | | 219 | 219 |
| 1989—1990 | | | 1128 | 1128 |
| 1990—1991 | | | 2561 | 2561 |
| 1991—1992 | | | 2625 | 2625 |
| 1992—1993 | | | 2738 | 2738 |
| 1993—1994 | 3261 | | 2946 | 6207 |
| 1994—1995 | 11718 | | 2965 | 14683 |
| 1995—1996 | 12859 | | 3381 | 16240 |
| 1996—1997 | 11946 | | 3375 | 15321 |
| 1997—1998 | 12488 | | 3774 | 16262 |
| 1998—1999 | 14866 | | 3668 | 18534 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1999–2000 | 15058 | | 3846 | 18904 |
| 2000–2001 | 21853 | | 3916 | 25769 |
| 2001–2002 | 23448 | | 3846 | 27294 |
| 2002–2003 | 28012 | | 3846 | 31858 |
| 2003–2004 | 28566 | | 4017 | 32583 |
| 2004–2005 | 29212 | | 4188 | 33400 |
| 2005–2006 | 30418 | | 4188 | 34606 |
| 2006–2007 | 30418 | | 4188 | 34606 |
| 2007–2008 | 37116 | | 4188 | 41304 |
| 2008–2009 | 41957 | | 4188 | 46145 |
| 2009–2010 | 54540 | | 6238 | 60778 |
| 2010–2011 | 56598 | | 9051 | 65649 |
| 2011–2012 | 59386 | | 10488 | 69874 |
| 2012–2013 | 62680 | | 12138 | 74818 |
| 2013–2014 | 63702 | | 13615 | 77317 |
| 2014–2015 | 83088 | | 14134 | 97222 |
| 2015–2016 | 87523 | | 15104 | 102627 |
| 2016–2017 | 99773 | | 15396 | 115169 |
| 2017–2018 | 240776 | | 17959 | 258735 |
| 2018–2019 | 354405 | | 19393 | 373798 |
| 2019–2020 | 330530 | | 26582 | 357112 |
| 2020–2021 | 270048 | 210435 | 21911 | 502394 |
| | 2116245 | 210435 | 252002 | 2578682 |

**அலுவலக குறிப்பு :-**

அரசுச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை, தலைமச்செயலகம், சென்னை அவர்களின் கடித அறிவுரைகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்திற்கிணங்க 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் பிரிவு 118–ன் கீழ் வசூலிக்கப்படாததை காலம் கடந்த மேற்காணும் வரித் தொகையினை வஜா செய்ய மன்றம் அனுமதிக்கலாம். மேலும், வஜா செய்யப்பட்ட சொத்துவரி விதிப்புகளை நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். (8778/2017/அ2)

**17.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட அனிச்சம்பாளையம் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய மீன்அங்காடி கட்டும் பணிக்கு ரூ.250.00 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்திடப்பட்டதில் Moulis Advertising Service Pvt Ltd., நிறுவனத்திடமிருந்து விளம்பரம் வெளியிட்டமைக்கு ரூ.26,040/– வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம். (5144/2019/இ1)

**18.** 24.07.2020–அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கைகளின்படி இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு பயன்படுத்தப்பட்டு உபயோகமில்லாமல் கீலகமான பழைய டஸ்ட்டு பின்களை பொது ஏலமிட்டு அப்புறப்படுத்த தனி அலுவலரின் முன் அனுமதியுடன் 06.08.2020 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் திரு.G.இராதாகிருஷ்ணன், திருவள்ளூர், சென்னை என்பவர் அதிகப்பட்ச ஏலத்தொகையாக ரூ.75,000/–க்கு கோரியுள்ளதை ஏற்று அனுமதிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பழைய பொருட்களின் விவரம் |
|---|---|
| 1 | கீலகமான பழைய டஸ்ட்டு பின்கள் – 66 எண்ணிக்கை |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. திரு.G.இராதாகிருஷ்ணன், திருவள்ளூர், சென்னை என்பவரின் உயர்ந்தப்பட்ச ஏலக்கேள்வி ரூ.75,000/– கோரி ஏலத் தொகையினை 06.08.2020 அன்று இரசீது எண்.3399–ல் செலுத்திவிட்டதை மன்றம் ஏற்று அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பொருட்கள் நகராட்சி அலுவலக பின்புறம் மற்றும் நகராட்சியின் பயணியர் விடுதியில் நீண்ட நாட்களாக வைக்கப்பட்டுள்ளதால், விஷப்பூச்சிகள் அடங்கும் இடமாக உள்ளதாலும், மேலும் பொதுசுகாதாரத்திற்கு கேடு உண்டாக்கும் நுண் கிருமிகள் உற்பத்தியாகும் சூழ்நிலையில் உள்ளதாலும், உடன் அப்புறப்படுத்த தனி அலுவலரின் அனுமதியுடன் உத்தரவு வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4793/2018/இ1)

**19.** 24.07.2020–அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கைகளின்படி இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு பொறியியல் மற்றும் பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு உபயோகமில்லாத பழைய வாகனங்களை பொது ஏலமிட்டு அப்புறப்படுத்த தனி அலுவலரின் முன் அனுமதியுடன் 06.08.2020 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் திரு.G.இராதாகிருஷ்ணன், திருவள்ளூர், சென்னை என்பவர் அதிகப்பட்ச ஏலத்தொகையாக ரூ.3,70,000/–க்கு கோரியுள்ளதை ஏற்று அனுமதிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | உபயோகமில்லாத வாகனங்களின் விவரம் |
|---|---|
| | <u>பொறியியல் பிரிவு பழைய வாகனங்கள்</u> |
| 1 | ஜீப் – TN 32 3888 |
| 2 | ஜீப் – TN 32 A 0675 |
| 3 | ரோட் ரோலர் – TDF 8142 |
| 4 | வேன் – TDF 5553 |
| | <u>பொதுசுகாதார பிரிவு பழைய வாகனங்கள்</u> |
| 1 | கழிவுநீர் டேங்கர் லாரி – TN 32 A 1071 |
| 2 | டம்பர் பிளேசர் – TN 32 C 3547 |
| 3 | டம்பர் பிளேசர் – TN 32 8616 |
| 4 | லாரி – TN 32 4754 |
| 5 | லாரி – TN 32 8617 |
| 6 | ஈச்சர் – TN 32 5079 |
| 7 | டிராக்டர் – MDF 5388 (முன்பகுதி மட்டும்) |
| 8 | டிராக்டர் – MDF 4351 (முன்பகுதி மட்டும்) |
| 9 | டிராக்டர் |
| 10 | மினிடிரக் – TN 32 A 8723 |
| 11 | மினிடிரக் |
| 12 | லாரி |
| 13 | லாரி – MDF 4495 |
| 14 | TN 32 C 3546 (TB) |

**அலுவலக குறிப்பு:-**

1. திரு.G.இராதாகிருஷ்ணன், திருவள்ளூர், சென்னை என்பவரின் உயர்ந்தப்பட்ச ஏலக்கேள்வி ரூ.**3,70,000/-** கோரி ஏலத் தொகையினை 06.08.2020 அன்று இரசீது எண்.3400-ல் செலுத்திவிட்டதை மன்றம் ஏற்று அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட உபயோகமில்லாத பழைய வாகனங்கள் நகராட்சி அலுவலக பின்புறம் மற்றும் நகராட்சியின் பயணியர் விடுதியில் நீண்ட நாட்களாக வைக்கப்பட்டுள்ளதால், விஷப்பூச்சிகள் அடங்கும் இடமாக உள்ளதாலும், மேலும் பொதுசுகாதாரத்திற்கு கேடு உண்டாக்கும் நுண் கிருமிகள் உற்பத்தியாகும் சூழ்நிலையில் உள்ளதாலும், உடன் அப்புறப்படுத்த தனி அலுவலரின் அனுமதியுடன் உத்தரவு வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4793/2018/இ1)

**20.** விழுப்புரம் நகராட்சி பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் **2020-21-**ன் கீழ் பணிக்கு ரூ.**500.00** இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்திடப்பட்டதில் Moulis Advertising Service Pvt Ltd., நிறுவனத்திடமிருந்து விளம்பரம் வெளியிட்டமைக்கு ரூ.**29,165/-** வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3547/2020/இ1)**

**21.** விழுப்புரம் நகராட்சி பயணியர் விடுதியில் உள்ள பழைய கட்டிடங்களை இடித்துவிட்டு புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு இடையூறாக உள்ள மூன்று மின்கம்பங்களை அகற்றி, மேலும் மின்கம்பங்களில் உள்ள மின் இணைப்புகள் எண்கள் **1).402 – 011 – 1372, 2).402 – 011 – 907** ஆகியவற்றினை அருகில் உள்ள மின் கம்பத்தில் மாற்றி (Pole to pole shifting) தருமாறும், மேலும் மின் இணைப்புகள் எண்கள் **1). 402 – 013 – 313, 2). 402 – 011 – 909, 3). 402 – 011 – 1322, 4).402 – 011 – 520, 5).402 – 011 – 333, 6).402 – 011 – 292, 7).402 – 011 – 235** ஆகிய மின் இணைப்புகளை துண்டிப்பு (Disconnection) செய்யுமாறு மின்வாரியத்திடம் கொண்டதன்பேரில் துண்டிப்பு கட்டணம் மற்றும் மின்கம்பங்கள் மாற்றியமைக்க முறையே ரூ.**2160/-**, ரூ.**4728/-** ஆக மொத்தம் ரூ.**6888/-**ஐ செலுத்தக்கோரி கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே, மின்வாரியத்திற்கு தொகை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தொகை செலுத்தியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(5144/2019/இ1)**

**22.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் குப்பை அள்ளும் காம்பேக்டர் லாரி TN-32-AC 8003 க்கு வாகன தகுதி சான்று பெற இவ்வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான விழுப்புரம் TVS Private Ltd என்ற நிறுவனத்திடமிருந்து பழுது நீக்கம் செய்யப்பட்டதற்கான செலவின பட்டியல் தொகை ரூ.**1,53,489/-** மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

மன்றம் அனுமதிக்கலாம்,பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்யவும் விழுப்புரம் TVS Private Ltd நிறுவனத்திற்கு பணிஉத்தரவு வழங்கியதை மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**23.** இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், அனைத்து பிரிவு ஓட்டுநர்கள், மகப்பேறு உதவியாளர்கள் , ஆயாக்கள், இரவு காவலர்கள் மற்றும் பிற பிரிவு அலுவலக உதவியாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கு எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 2020—2021 ம் ஆண்டுக்கான சீருடைகள் அரசு சார்புடை நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கிடவும், அதற்குண்டான செலவினத் தொகை மற்றும் சீருடைகளுக்கு உண்டான தையல் கூலி ரொக்கமாக வழங்கிடவும் இதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ 5.00 லட்சத்தை வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(5518/2020/எச்2)**

**24.** விழுப்புரம் நகராட்சியில் வருமானம் ஈட்டக்கூடிய இனங்களான சொத்துவரி மற்றும் காலியிடவரி மற்றும் SUC வரி மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.**533** லட்சமும், தொழில் வரியின் மூலம் ரூ.**171** லட்சமும், குடிநீர் கட்டணம் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.**63.50** லட்சமும், பாதாள சாக்கடை கட்டணம் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.**72.25** லட்சமும், ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடைகள் மூலம் ரூ.**82.00** லட்சம், ஆக மொத்தம் ரூ.**921.75** லட்சம் வருவாய் ஈட்டப்படுகிறது. இதனை தவிர்த்து அரசிடமிருந்து மாநில பகிர்மான நிதி மற்றும் **15—**வது நிதிக்குழுவின் மூலமும் இந்நகராட்சிக்கு வருமானம் வருகிறது.

2. மேற்படி வருமானத்தை வைத்து நகராட்சிப் பணியாளர்களுக்கு ஊதியம், மின்கட்டணம், தெரு விளக்கு பராமரிப்பு, தூய்மை பணி மேற்கொள்ளும் தனியார் நிறுவன தூய்மை பணியாளர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்குதல், பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் கொள்முதல் செய்தல், பாதாளசாக்கடை பராமரிப்பு செலவினம் மற்றும் இதர செலவினங்களுக்கு போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும் மற்றும் அடிப்படை பணிகளை மேற்கொள்ள போதிய நிதியாதாரம் இல்லாத நிலையில், பெரும்பாலான பணிகளுக்கு அரசிடமிருந்து மானியம் பெற்று வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

3. 1920—ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 328—வது பிரிவின்படியும், அரசாணை எண்.1216, உள்ளாட்சி துறை, நாள்.04.04.1938, அரசாணை எண்.1915, உள்ளாட்சி துறை நாள்.22.07.1971, விதி 3(4), அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007, அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.19.09.2008—ன் குத்தகை விதிகளின் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம்

ந.க.எண்.3507/2004/பி3, நாள்.09.09.2005 மற்றும் ந.க.எண்.43339/2006/பி3, நாள்.01.08.2006 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.43339/2006/பி3, நாள்.01.08.2006 ஆகியவற்றில் நகராட்சிகளுக்கு போதிய நிதி ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு, நகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் கடைகள், அங்காடிகள், பேருந்து நிலையம், திரையரங்குகள், கல்யாண மண்டபங்கள் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்கள் ஆகியவற்றினை கட்டிக்கொள்ளளாம் எனவும், அதற்கான நிதி ஆதாரத்தினை முன் ஏலம் (Pre-Auction) நடத்தி அதன் மூலம் முன் வைப்புத்தொகை மற்றும் முன் பணம் பெற்று கட்டுமான பணியினை மேற்கொள்ளலாம் என உத்திரவிடப்பட்டுள்ளது.

4. விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் பழுதடைந்து கீலகமான நிலையிலிருந்த 10 கடைகளை இடித்துவிட்டு தற்போது புதியதாக பழைய பேருந்து நிலையத்தின் வெளிப்புறம் (பி.ஜே.என்.சாலை) தரைதளத்தில் 11 கடைகளும், பழைய பேருந்து நிலையத்திற்கு உட்புறமாக 11 மற்றும் 6 என 17 கடைகளும் ஆக மொத்தம் 28 கடைகளுக்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த கடைகளுக்கு உண்டான பட்டியல் தொகை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்குவதற்கு தற்போது நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

5. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில், விழுப்புரம் நகராட்சிக்கு போதிய நிதி ஆதாரம் உருவாக்கும் பொருட்டு, மேற்படி விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் தற்போது தரை தளத்தில் கட்டப்பட்டு வரும் 28 கடைகளின் முதல் தளத்திலும் மற்றும் பழைய பேருந்து நிலையத்தின் கிழக்கு பகுதியில் மிகவும் பழுதடைந்த நிலையில் மேற்கூரை தகர கொட்டகை கொண்டு செயல்பட்டு வரும் பூக்கடைகளை காலி செய்து விட்டு அந்த இடத்திலும் தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றில் புதியதாக கடைகள் கட்டவும், அதற்கான மதிப்பீட்டு தொகையினை முன் ஏலம் நடத்தி வைப்பு தொகை பெற்று மேற்படி கடைகளை கட்டி முடிக்கலாம் என அறிவுரை வழங்கினார்கள்.

6. மேற்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மற்றும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படியும் பழைய பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் தற்போது தரை தளத்தில் கட்டப்பட்டு வரும் கடைகளுக்கு முதல் தளத்தில் அலவலகம் மற்றும் வங்கி பயன்பாட்டிற்கு ஏற்றவாறு கட்டிடம் கட்டவும், பழைய பேருந்து நிலையத்தில் பெட்ரோல் பங்கு பின்புறத்தில் கட்டப்பட்டு வரும் 6 கடைகளின் முதல் தளத்தில் கூடுலாக 6 கடைகள் கட்டவும் மற்றும் பழைய பேருந்து நிலையத்தின் கிழக்கு பகுதியில் மிகவும் பழுதடைந்த நிலையில் மேற்கூரை தகர கொட்டகை கொண்டு செயல்பட்டு வரும் பூக்கடைகளை காலி செய்து, அந்த இடத்திலும் தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகியவற்றில் புதியதாக கடைகள் கட்ட ஏதுவாக, உதவி பொறியாளரின் குறிப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீட்டு தொகையினை தயார் செய்து உதவி பொறியாளர் பின்வருமாறு வழங்கி உள்ளார்.

| வ. எண். | இடம் | கடைகளின் அளவு | கடைகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலையம் மேற்கு பகுதி தரைதளத்தில் கட்டடப்பட்டு வரும் கடைகளின் முதல் தளம் (மேற்கு பகுதி) | 19.20 மீட்டர் x 7.50 மீட்டர் | 1 | 19.40 |
| 2. | பழைய பேருந்து நிலையம் மேற்கு பகுதி தரைதளத்தில் கட்டடப்பட்டு வரும் கடைகளின் முதல் தளம் (கிழக்கு பகுதி) | 16.00 மீட்டர் x 7.50 மீட்டர் | 1 | 18.50 |
| 3. | பழைய பேருந்து நிலையம் பெட்ரோல் பங்கு பின்புறம் தரைதளத்தில் கட்டடப்பட்டு வரும் கடைகளின் முதல் தளம் | 10.00 அடி x 12.00 அடி | 6 | 14.30 |
| 4. | பழைய பேருந்து நிலைய கிழக்கு பகுதியில் மிகவும் பழுதடைந்த நிலையில் மேற்கூரை தகரை கொட்டகை கொண்டு செயல்பட்டு வரும் பூக்கடைக்கு மேற்கு வெளிப்புறம் தரைதளம் (பி.ஜே.என் சாலை) மற்றும் பழைய பேருந்து நிலைய உட்புறம். | 10.00 அடி x 10.00 அடி | 4 | 18.40 |
| | | 8.00 அடி x 10.00 அடி | 4 | |
| 5. | பழைய பேருந்து நிலைய கிழக்கு பகுதியில் மிகவும் பழுதடைந்த நிலையில் மேற்கூரை தகரை கொட்டகை கொண்டு செயல்பட்டு வரும் பூக்கடைக்கு கிழக்கு வெளிப்புறம் தரைதளம் (பி.ஜே.என் சாலை) மற்றும் பழைய பேருந்து நிலைய உட்புறம். | 10.00 அடி x 10.00 அடி | 4 | 19.80 |
| | | 8.00 அடி x 10.00 அடி | 4 | |
| 6. | பழைய பேருந்து நிலைய கிழக்கு பகுதியில் மிகவும் பழுதடைந்த நிலையில் மேற்கூரை தகரை கொட்டகை கொண்டு செயல்பட்டு வரும் பூக்கடைக்கு மேற்கு வெளிப்புறம் முதல் தளம் (பி.ஜே.என் சாலை) மற்றும் பழைய பேருந்து நிலைய உட்புறம். | 10.00 அடி x 10.00 அடி | 4 | 14.50 |
| | | 8.00 அடி x 10.00 அடி | 4 | |
| 7. | பழைய பேருந்து நிலைய கிழக்கு பகுதியில் மிகவும் பழுதடைந்த நிலையில் மேற்கூரை தகரை கொட்டகை கொண்டு செயல்பட்டு வரும் பூக்கடைக்கு கிழக்கு வெளிப்புறம் முதல் தளம் (பி.ஜே.என் சாலை) மற்றும் பழைய பேருந்து நிலைய உட்புறம். | 10.00 அடி x 10.00 அடி | 4 | 15.50 |
| | | 8.00 அடி x 10.00 அடி | 4 | |

தற்போது விழுப்புரம் நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று காரணமாக போதிய வருவாய் இல்லாத காரணத்தினால், மேலே பத்தி 4–ல் குறிப்பிட்டுள்ள தற்போது கட்டப்பட்டு வரும் கடைகளின் கட்டுமான பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை வழங்க போதிய நிதியாதாரம் இல்லாத காரணத்தினாலும், மேலே பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்

அவர்களின் கடிதம் மற்றும் சுற்றறிக்கையின்படியும், மேலே பத்தி 5—ல் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்களின் 01.08.2020 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் வழங்கிய அறிவுரையின்படியும், மேலே பத்தி 6—ல் உதவி பொறியாளரின் குறிப்பில் தெரிவித்துள்ள கடைகளுக்கும் மற்றும் பழைய பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் தற்போது தரைதளத்தில் 10 x 12 என்ற அளவில் கட்டப்பட்டு வரும் 22 கடைகளுக்கும் மற்றும் பழைய பேருந்து நிலையத்தின் பெட்ரோல் பங்கு பின்புறம் தரைதளத்தில் கட்டப்பட்டு வரும் 10x12 என்ற அளவில் 6 கடைகளும் ஆக மொத்தம் 28 கடைகளுக்கும் முன் ஏலம் மற்றும் முன் ஒப்பந்தப்புள்ளி பெற்று அதன் மூலம் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை பெற்று மேற்காணும் கடைகளுக்கு பட்டியல் தொகை வழங்கவும் மற்றும் கூடுதலாக கடைகள் கட்டும் பணியினை மேற்கொள்ளவும்,

மேலும், விழுப்புரம் நகராட்சி நூற்றாண்டு விழா சிறப்பு நிதி 2019—2020—ன் கீழ் பழைய பேருந்து நிலையத்தில் கட்டப்படவுள்ள 10 கடைகளுக்கும் (10 x 10) முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெற்று அதன் மூலம் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை பெற்று அந்த நிதியினை பயன்படுத்தி பழைய பேருந்து நிலையத்தில் மேற்குபகுதியில் கட்டப்பட்டு வரும் 28 கடைகள் மற்றும் கூடுதலாக கட்டப்படவுள்ள கடைகளுக்கும் பட்டியல் தொகை வழங்கவும் மற்றும் ஏல ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை மாவட்ட அளவிலான செய்தி தாளில் விளம்பரம் செய்யவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

(7098/2014/அ1)

**25.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.K.Dis No.31117/P3/2015 நாள் . 07.11.2015 ல் இந்நகராட்சிக்கு 158 தூய்மை பணியாளர் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் 3 வருடத்திற்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு கிரீன் வாரியர், திருவள்ளூர் என்ற நிறுவனத்திற்கு, பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.09.2016 முதல் தூய்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 31.08.2019ல் முடிவடைவதால், பொதுசுகாதார நலன் கருதி மேற்படி ஒப்பந்த காலத்தினை மேலும் 6 மாத காலத்திற்கு (01.09.2019 முதல் 29.02.2020 வரை) நீட்டிப்பு செய்து தனி அலுவலரின் தீர்மான எண் 1818 நாள் 20.09.2019 ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அனுமதிக்கப்பட்ட 158 தூய்மை பணியாளர்களை மேலும் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நீட்டிப்பு செய்ய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வழியாக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. உரிய அனுமதி பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறுவதற்கு காலதாமதமாவதால், பொது சுகாதாரப்பணிகள் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, மேலும் 3 மாதம் (01.03.2020 முதல் 31.05.2020 வரையும் நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண்.2019, நாள்.27.02.2020) தொடர்ந்து மேலும், 3 மாதம் 01.06.2020 முதல் 31.08.2020 வரையிம் நகர மன்ற தனி அலுவலரின் தீர்மான எண்.2103, நாள்.29.05.2020 அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் உரிய அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே பொது சுகாதார பணிகள் பாதிக்கப்படாமலிருக்கவும், தற்சமயம் கொரோனா தொற்று விழுப்புரம் நகராட்சியில் அதிக எண்ணிக்கையில் உள்ளதாலும், அதனை கட்டுப்படுத்தும் பணியில் தூய்மை பணியாளர்கள் பங்கு அவசியம் என்பதாலும், மேலும் 3 மாத காலத்திற்கு (01.09.2020 முதல் 30.11.2020 வரை) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ 90 இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

( / /எச்1)

**26.** இந்நகராட்சியின் ஆணையர் அறைக்கு நவீன வசதிகளுடன் கூடிய கணினி ஒன்றும் மற்றும் நகர்நல அலுவலர், எழுத்தர்கள் 2 நபர் ஆக மூன்று நபர்களுக்கு தலா ஒரு கணினியும் ஆக மொத்தம் நான்கு கணினி மற்றும் மூன்று HP Laser Jet Printer சப்ளை செய்யும் பணிக்கு 22–05–2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனம் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s Adhav Solutions,<br>No.3, Parthasarathi Lay-out,<br>K.K.Road, Villupuram. | 259900 |
| 2 | Akalya Infotech,<br>No.53/B, MRK Street,<br>Villupuram -605602 | 261500 |
| 3. | Ramij Infosys,<br>No.288, K.K.Road, Villupuram. | 266000 |

வரப்பெற்ற மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்ட M/S. Adhav Solutions அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரிக்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/S. Adhav Solutions அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4644/2020/இ2)

**27.** நாடாளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை) உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2018-19–ன் கீழ் 41வது வார்டு (கிழக்கு பாண்டி ரோடு) மகாராஜபுரம் சுடுகாட்டு பாட்டையில் கருமாதி கொட்டகை அமைக்கும் பணிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயலாணை ந.க.எண்.ஆ6/1771/2018, நாள்.13.01.2020–ல் ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 05.06.2020 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | ரூ.7,55,585/– | 0.16% குறைவு |
| 2 | திரு.Kதட்சணாமூர்த்தி, ஒப்பந்ததாரர். | ரூ.7,66,720/– | 1.32% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.16% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4653/2019/இ1)

**28.** நாடாளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை) உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2018-19–ன் கீழ் 40வது வார்டில் (மகாராஜபுரம் ஹவுசிங்போர்டு நியாய விலைக்கடை அருகில்) குழந்தைகள் அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டும் பணிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயலாணை ந.க.எண்.ஆ6/1771/2018, நாள்.13.01.2020–ல் ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 05.06.2020 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | ரூ.7,76,482/– | 0.12% குறைவு |
| 2 | திரு.Kதட்சணாமூர்த்தி, ஒப்பந்ததாரர். | ரூ.7,85,391/– | 1.02% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.12% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(4653/2019/இ1)

**29.** நாடாளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை) உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2018-19–ன் கீழ் 11வது வார்டு அய்யனார் குளம் தெற்கு தெருவில் நியாய விலைக் கடைக்கு கூடுதல் கட்டட பணிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயலாணை ந.க.எண்.ஆ6/1771/2018, நாள்.13.01.2020–ல் ரூ.1.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 05.06.2020 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.M.ஆறுமுகம், ஒப்பந்ததாரர். | ரூ.1,19,319/– | 0.05% குறைவு |
| 2 | திரு.R.நாகராஜ், ஒப்பந்ததாரர். | ரூ.1,20,624/– | 1.04% அதிகம் |

**அலுவலக குறிப்பு:—**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.M.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4653/2019/இ1)**

**30.** நாடாளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை) உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2018-19—ன் கீழ் விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.36, காகுப்பம், அரசு நடுநிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் மற்றும் நுழைவுவாயில் கேட் அமைக்கும் பணிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயலாணை ந.க.எண்.ஆ6/1771/2018, நாள்.05.07.2019—ல் ரூ.9.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 05.06.2020 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s திவாகர் கன்ஸ்ட்ரக்ஷன்,<br>ஒப்பந்ததாரர். | ரூ.9,34,688/— | 0.12%<br>குறைவு |
| 2 | திரு.Kதட்சணாமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர். | ரூ.9,50,430/— | 1.56%<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு:—**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s திவாகர் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.12% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4653/2019/இ1)**

**31.** நாடாளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை) உள்ளூர் வளர்ச்சித் திட்டம் 2018-19—ன் கீழ் விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.41, லஷ்மி நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு (நீளம் 120 மீட்) விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயலாணை ந.க.எண்.ஆ6/685/2019, நாள்.22.06.2019—ல் ரூ.3.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 05.06.2020 அன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.P.பாலகுரு,<br>ஒப்பந்ததாரர். | ரூ.3,02,788/— | 0.12%<br>குறைவு |
| 2 | M/s சரண் கன்ஸ்ட்ரக்ஷன்,<br>ஒப்பந்ததாரர். | ரூ.3,06,388/— | 1.07%<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு:—**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.P.பாலகுரு, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.12% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4653/2019/இ1)**

**32.** இந்நகராட்சியின் தொழில்வரி இனத்தில் அதிக நிலுவை உள்ளதால் அதனை வசூலிக்க இயலாததற்கான காரணம் வருவாய் உதவியாளர்களிடம் குறிப்பு வழங்கி கோரப்பட்டதில் பல நிறுவனங்கள் மற்றும் கடைகள் காலி செய்யப்பட்டு விட்டதால் அந்த நபர்கள் எங்கு சென்றார்கள் என்ற விவரம் அறியாத நிலை உள்ளதால் அந்த தொகையினை வசூலிக்க இயலவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (வசூலிக்க இயலாத நிலையில் உள்ள தொழில்வரி விதிப்புகளின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

வருவாய் உதவியாளர்களின் குறிப்பின் மீது வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் அலுவலர் குறிப்பு கோரியதில் வருவாய் உதவியாளர்கள் அளித்துள்ள பட்டியலில் கண்டுள்ள நிறுவனங்கள் மற்றும் கடைகள் உரிய முகவரியில் இருந்து காலி செய்யப்பட்டுவிட்டது தெரிய வருகின்றது. அந்த தொழில்வரி தொகையினை வசூலிக்க இயலாத நிலை உள்ளதால் அதனை மன்றத்திற்கு பொருள் வைத்து வஜா செய்திட நடவடிக்கை மேற்க்கொள்ளலாம் என தெரிவித்துள்ளனர்.

எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.75380/94/ஆ1, நாள்.20.01.2000–ன்படி அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடித (பத்தாண்டு) எண்.393 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.07.2000–க் அறிவுரைகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.44457/2000/டி3, நாள்.31.07.2000 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 26.06.2020 தேதிய மற்றும் பல்வேறு காணொளி காட்சி ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 118–ன் கீழ் வசூலிக்கப்படாத காலம் கடந்த வரியினங்களை தள்ளுபடி செய்திட நகர்மன்றத்திற்கே அதிகாரம் உள்ளதன் அடிப்படையின் கீழ்காணும் விவரப்படி வசூலிக்க இயலாத நிலையில் உள்ள தொழில்வரி இனங்களை தள்ளுபடி செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தொழில் வரி தொகை |
|---|---|---|
| 1 | 1 | 24130 |
| 2 | 3 | 145428 |
| 3 | 4 | 4086 |
| 4 | 5 | 7114 |
| 5 | 6 | 16850 |
| 6 | 11 | 576425 |
| 7 | 13 | 53149 |
| 8 | 16 | 52040 |
| 9 | 17 | 107525 |
| 10 | 19 | 73954 |
| 11 | 20 | 128323 |
| 12 | 25 | 620 |
| 13 | 27 | 7464 |
| 14 | 30 | 5670 |
| 15 | 31 | 1965 |
| 16 | 32 | 3835 |
| 17 | 34 | 2250 |
| 18 | 36 | 1608 |
| 19 | 41 | 42341 |
| | **மொத்தம்** | **12,54,777** |

**அலுவலக குறிப்பு:–**

வசூலிக்க இயலாத நிலுவையில் உள்ள தொழில்வரி தொகை ரூ.1254777/–ஐ தள்ளுபடி செய்திட மன்றம் அனுமதிக்கலாம். மேலும் தொடர் கேட்பு எழுப்பப்படாமல் தள்ளுபடி செய்யப்படும் வரி விதிப்புகளை நீக்கம் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(574/2019/எச்4)**

**33.** விழுப்புரம் நகராட்சி அலுவலகத்திற்கு தனியார் மேன்பவர் மூலம் பொறியியல் பிரிவுக்கு நான்கு தொழில்நுட்ப உதவியாளர் நிலை–II, மூன்று தட்டச்சர்கள் சப்ளை செய்யும் பணிக்கு ரூ.**8.10** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **29.07.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.P.பாலகுரு, ஒப்பந்ததாரர். | 805050.00 | 0.07% குறைவு |
| 2 | திரு.P.சிவகுரு, ஒப்பந்ததாரர். | 811500.00 | 0.73% அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.P.பாலகுரு ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.07% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(5097/2020/இ3)**

**34.** விழுப்புரம் நகராட்சியில் தற்போது (COVID-19) தடுப்பு பணிகள் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்று வருவதை தொடர்ந்து, பொதுமக்களின் நலன் கருதி – மாவட்ட ஆட்சியர் உத்தரவின்படி, பொதுசுகாதாரத் துறையின் மூலம் பெறப்படும் பட்டியல்படி கொரோனா தொற்று கண்டறியப்படும் நபர்களின் வீடுகளை தனிமைப்படுத்துவதற்காக, இந்நகராட்சி மூலம் சவுக்கு மரம் கொண்டு தடுப்பு சாரம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**5.00** இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு தனிஅலுவலரின் முன்அனுமதியுடன் பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(5636/2020/இ2)**

**35.** விழுப்புரம் நகராட்சியில் 04 முதல் 17 வரை மற்றும் 32 முதல் 39 வரை வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோகக் குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் மற்றும் பராமரிக்கும் பணிக்கு ரூ.**9.70** இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **28.07.2020–ல்** கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர். | ரூ.9,48,784/– | 0.04% குறைவு |
| 2 | SSV டெவலப்பர்ஸ், ஒப்பந்ததாரர். | ரூ.9,60,397/– | 1.19% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இராஜா, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4842/2020/இ2)**

**36.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.26 எம்.ஜி.ஆர் தெரு, வீனஸ் நகர், சரஸ்வதி நகர், வாரியார் தெரு மற்றும் முல்லை தெரு ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.7.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.07.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | ரூ.7,09,847/– | 0.58% குறைவு |
| 2 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | ரூ.7,28,535/– | 2.04% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.58% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4840/2020/இ2)**

**37.** விழுப்புரம் நகராட்சியில் 01, 02, 03, 18 முதல் 31 வரை மற்றும் 40 முதல் 42 வரை வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோகக் குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்தல் மற்றும் பராமரிக்கும் பணிக்கு ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.07.2020–ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விகிதம் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர். | ரூ.9,48,784/– | 0.04% குறைவு |
| 2 | திருமதி.C.வள்ளி, ஒப்பந்ததாரர். | ரூ.9,61,237/– | 1.27% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இரத்தினசபாபதி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியுடன் பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4843/2020/இ2)**

**38.** விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் உள்ள தெரு மின்விளக்குகளுக்கு புதியதாக மின்இணைப்பு வேண்டியுள்ளதால், அதற்கான கேட்பு தொகை தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திடமிருந்து வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும், கேட்பில் கண்டுள்ளப்படி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தொகை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

| வ. எண் | மின்இணைப்பு பெற வேண்டிய பகுதி | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திடீர்குப்பம் | 500 |
| 2 | செல்லியம்மன் கோயில் தெரு | 500 |
| 3 | கமலா கண்ணப்பன் நகர் | 500 |
| 4 | கணபதி நகர், பானாம்பட்டு | 500 |
| | **மொத்தம்** | **2000** |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட நான்கு பகுதிகளுக்கான புதிய மின்இணைப்பு கேட்பு தொகை ரூ.2000/– ஐ தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேலும், தெருவிளக்கு பணியின் அவசரத்தை கருத்தில் கொண்டு இனி வரும் காலங்களில் புதியதாக தெரு மின்விளக்குகள் அமைக்க மின்இணைப்பு பெறுதவற்கான கேட்பு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடமிருந்து வரும்பட்சத்தில், அவரச அவசியம் கருதி அதற்குண்டான தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5659/2020/இ2)

**39.** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 83 துணைபிரிவு 1 (C) நாள் 25.01.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1, நாள்.15.03.2018 மற்றும் 28.03.2018–ன்படி தனியார் பள்ளி மற்றும் கல்லூரி நிறுவனங்களுக்கு 01.10.2017 முதல் புதியதாக சொத்து வரி விதிப்பு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதின் பேரில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2291/2018/அ2, நாள்.19.03.2016–ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் பள்ளி மற்றும் கல்லூரிகளை அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ள குழு அமைக்க உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து வார்டு எண்.08, திரு.வி.க வீதியில் உள்ள சரஸ்வதி மெட்ரிகுலேஷன் தனியார் கல்வி நிறுவனத்திற்கு பொது பணி மேற்பார்வையாளர் அவர்கள் அளித்த அளவீட்டின்படி கீழ்கண்டவாறு சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டது.

| வ. எண். | வரி விதிப்பு எண் | பகுதி | கட்டிடத்தின் அளவீடு சதுர அடி | சொத்து வரி அரையாண்டு கேட்பு தொகை ரூ. | சொத்து வரி 2017–18–II அரையாண்டு முதல் 2020–21–II–ம் அரையாண்டு வரை கேட்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | 044/008/00966 | தளாளர் அறை | 1316 | 2418 | 16926 |
| 2. | 044/008/00967 | கூடுதல் கட்டிடம் | 1820 | 4459 | 31213 |
| 3. | 044/008/00968 | வடக்கு கட்டிடம் | 28000 | 68607 | 480249 |
| 4. | 044/008/00969 | மேற்கு கட்டிடம் | 35200 | 86249 | 603743 |
| 5. | 044/008/00970 | படிக்கட்டு அறை | 3300 | 8086 | 56602 |
| 6. | 044/008/00971 | எல்.கே.ஜி மற்றும் உயிரியல் ஆய்வகம் A/C Sheet | 5175 | 9509 | 66563 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | 044/008/00972 | எல்.கே.ஜி மற்றும் உயிரியல் ஆய்வகம் | 10350 | 25359 | 177513 |
| 8. | 044/008/00973 | யூ.கே.ஜி கட்டிடம் | 1652 | 4048 | 28336 |
| 9. | 044/008/00974 | எல்.கே.ஜி உயிரியல் ஆய்வகம் A/C Sheet | 6720 | 16466 | 115262 |
| | | | 93533 | 2,25,201 | 15,76,407 |

சரஸ்வதி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு சொத்து வரி விதிப்பு செய்து மேற்படி கணக்கீட்டின்படி சிறப்பு அறிக்கை சார்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து பள்ளி தாளலர் பள்ளிக்கு அதிக படியான அளவீடு செய்து அளவு கணக்கிடப்பட்டு சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் அதனை மீளவும் உரிய முறையில் அளவீடு மேற்கொண்டு சொத்து வரி விதிப்பு செய்யும் பட்சத்தில் சொத்து வரியினை செலுத்த தயாராக உள்ளதாக தெரிவித்தன் பேரில் நகராட்சி ஆணையர் அவர்கள், மேலாளர் தலைமையில் குழு அமைத்து மறு அளவீடு செய்து அதன் அறிக்கை சமர்பிக்க கோரப்பட்டதில் கீழ் கண்ட விவரப்படி குழு தனது அறிக்கையினை சமர்பித்துள்ளது.

| வ. எண். | கட்டிடத்தின் விவரம் | கட்டிடத்தின் அளவீடு விவரம் |
|---|---|---|
| 1. | நிர்வாக கட்டிடம் | 1368 |
| 2. | வடக்கு கட்டிடம் | 19980 |
| 3. | மேற்கு கட்டிடம் | 17730 |
| 4. | அலுவலக கட்டிடம் | 1620 |
| 5. | அலுவலக கட்டிடம் A/C Sheet | 1620 |
| 6. | உயிரியல் ஆய்வகம் | 3938 |
| 7. | உயிரியல் ஆய்வகம் A/C Sheet | 3938 |
| 8. | உணவு உண்ணும் அறை<br>பூஜை அறை | 1269 |
| | | 51463 |

மேற்காணும் குழு அளித்த கட்டிடத்தின் சதுரடிக்கும் ஏற்கனவே சொத்து வரி விதிப்பு செய்த கட்டிடத்தின் சதுரடிக்கும் அதிகபடியான அளவீடு வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. (ஏற்கனவே சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட சதுர அடி **93533/–** குழு அளித்த அளவீடு சதுர அடியில் **51463** சதுர அடி = வித்தியாசம் **42070** சதுர அடி) ஆகும். எனவே, கூடுதலாக அளவீடு செய்து சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என தெரியவருவதன் பேரிலும் இதனை சட்ட ரீதியாக வசூலிக்க இயலததாலும் சொத்து வரி விதிப்பு எண்.**044/008/00966** முதல் **044/008/00974** வரை **2017–2018–II–**ம் அரையாண்டு முதல் **2020–2021–II –**ம் அரையாண்டு வரை ரூ.**15,76,407/–**ஐ **1920–**ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் பிரிவு **118–**ன் கீழ் வஜா (Write off) செய்தும் மற்றும் சொத்துவரி விதிப்பினை நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் குழு அளித்த அளவீட்டின் படி **2017–2018–II** அரையாண்டு முதல் புதியதாக சொத்து வரி விதிப்பு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

**1.** கூடுதலாக அளவீட்டல் வரி விதிப்பு செய்யப்பட்ட வரி விதிப்பு எண்கள் **(044/008/00966** முதல் **044/008/0097** வரை) சொத்து வரி கேட்பு தொகை ரூ.**15,76,407/–**ஐ **–** வரி வஜா (Write off) செய்ய மன்றம் அனுமதிக்கலாம். மேலும், வஜா செய்யப்பட்ட சொத்து வரி விதிப்புகளை நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** குழு அளித்த அளவீட்டின் படி **01.10.2017** முதல் புதியதாக சொத்து வரி விதிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(2291/2018/அ2)**

**40.** இந்நகராட்சியில் நூற்றாண்டு விழா சிறப்பு நிதி திட்டம் 2019–20 (ம) தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய திட்ட நிதியின் கீழ் விழுப்புரம் நகராட்சி அனிச்சம்பாளையம் பகுதியில் புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய மீன்அங்காடி (மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை) மதிப்பீடு ரூ.250.00 இலட்சத்தில் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 18.08.2020 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் கீழ்க்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி பெற்றதால் 24.08.2020 அன்று விலைப்புள்ளி உறைகள் பிரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரார் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் மதிப்பீட்டை விட | விலை குறைப்பு |
|---|---|---|---|---|
| 1 | திரு.J.முருகன், ஒப்பந்ததாரர். | 25059512/– | 5.03% அதிகம் | 3.50% ரூ.24694407/– |
| 2 | திரு.R.ரமேஷ், ஒப்பந்ததாரர். | 25547872/– | 7.07% அதிகம் | – |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.J.முருகன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 5.03% அதிகம் கொடுத்துள்ளதை தொடர்ந்து விலை குறைப்பு கோரி (Negotitation) அறிவிப்பு வழங்கப்பட்டதையடுத்து 5.03%–லிருந்து 3.50% என (GST உள்பட விலைப்புள்ளி ரூ.24694407/–) குறைப்பு செய்து கொடுத்துள்ளார். திட்டப் பணியின் அவசியம் கருதி 3.50% மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(5144/2019/இ1)**

**41.** விழுப்புரம் நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட இடங்களில், அப்பகுதி மக்களுக்கு மருத்துவ உதவி செய்ய மருத்துவ முகாம் நடைபெறும் இடங்களில் ஒரு முகாமிற்கு சாமியானா பந்தல் (10”X10”), டேபிள்–2, சேர்கள்–6 அமைத்து தர , தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 20.07.2020 விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற மூன்றுவிலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரார் பெயர் மற்றும் விவரம் | விவரம் | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | ரூ |
| 1 | K.ரத்தினசபாபதி,பிள்ளையார், 19, கோவில் தெரு, வி.மருதூர், விழுப்புரம் | 1 முகாம் | 700/– |
| 2 | R. நாகராஜ், 14/376, ஜிஆர்பி தெரு, விழுப்புரம். | 1 முகாம் | 810/– |
| 3 | K.தட்சணாமூர்த்தி, 40, வி .மருதூர் மேடு, கிழக்கு சண்முகபுரம், விழுப்புரம். | 1 முகாம் | 850/– |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் அதனை தொடர்ந்து குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள K.ரத்தினசபாபதி, 19, பிள்ளையார் கோவில் தெரு, வி.மருதூர், விழுப்புரம் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2116–23/2020/எச்1)**

**42.** மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்கள் கொரோனா நோய் தொற்று உள்ள பகுதிகளில், மருத்துவ முகாம் நடைபெறும் இடங்களில் கள ஆய்வு செய்த போது, முகாமிற்கு நகர்புற ஆரம்ப சுகாதார மையத்திலிருந்து (1. மகாராஜபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் 2. PJN Road நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்) செவிலியர்கள், காலதாமதமாக வருவது குறித்து காரணம் கோரிய நிலையில், அவர்கள் வாகன போக்குவரத்து வசதி இல்லாததாலும், மேலும் மருத்துவ முகாம் ஒவ்வொரு நாளும் வேறு வேறு இடங்களில் நடைபெறுவதால் காலதாமதமாக வருவதாக தெரிவித்ததை அடுத்து, அவர்களை நகர்புற ஆரம்ப சுகாதார மையத்திலிருந்து ஆட்டோக்கள் மூலம் அழைத்து வந்து மீண்டும் அடுத்த முகாமிற்கும் பிறகு முகாம் நிறைவுற்றதும் மீண்டும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்று விடவும் , நகராட்சி மூலம் ஏற்பாடுகள் செய்து தர உத்தரவிடப்பட்டுள்ளதால், அலுவலகம் மூலம் 2 ஆட்டோக்கள் வசதி செய்து தருமாறு துப்புரவு ஆய்வர்கள் தமது குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

எனவே மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் உத்தரவுப்படி 2 நகர்புற சுகாதார நிலையத்திற்கு தலா 1 ஆட்டோ வீதம் 2 ஆட்டோக்கள் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையிலும் பயன்படுத்தவும், விலைப்புள்ளி கோரலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரபெற்றது.

1. H.ஹசன் பஷீர், ஆட்டோ ஓட்டுநர், ரூ650/–
   (TN32 AI 9472) விழுப்புரம்.
2. S.சந்துரு, ஆட்டோ ஓட்டுநர், ரூ650/–
   (TN32 AS 2859), கோலியனூர்.

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளையும் ஏற்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/–ஐ மாநில பேரிடர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதையும், பணி உத்தரவு வழங்கியதையும் , பட்டியல் வரப்பெற்றவுடன் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**43.** மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்படி, கோலியனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலம், நகராட்சியில் கொரோனா தொற்று பாதிப்பு அதிகம் உள்ள நிலையில் கிருமி நாசினி தெளிக்க டிராக்டர் TN19 X0208 வாகனம் பயன்படுத்தப்பட்டதற்கு 4.4.2020 அன்று ஒருநாள் 2 நடைகள் கிருமி நாசினி தெளித்தவகையில், ஓட்டுநர் திரு.K.முருகையன் என்பவர் ரூ.6000/– வழங்க கோரியுள்ளார். களப்பணியாளர் மேற்படி நாளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டதற்கு சான்று அளித்துள்ளார். எனவே மேற்கண்ட தொகை ரூ.6000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம் . மேற்கண்ட தொகையை மாநில பேரிடர் நிதியில் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2116–23/2020/எச்1)

**44.** மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்படி, கோலியனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலம், நகராட்சியில் கொரோனா தொற்று பாதிப்பு அதிகம் உள்ள நிலையில் கிருமி நாசினி தெளிக்க டிராக்டர் TN32 V0058 வாகனம் பயன்படுத்தப்பட்டதற்கு 4.4.2020 அன்று ஒருநாள் 2 நடைகள் கிருமி நாசினி தெளித்தவகையில், ஓட்டுநர் திரு.D.தணிகைவேல் என்பவர் ரூ.6000/– வழங்க கோரியுள்ளார். களப்பணியாளர் மேற்படி நாளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டதற்கு சான்று அளித்துள்ளார். எனவே மேற்கண்ட தொகை ரூ.6000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம் . மேற்கண்ட தொகையை மாநில பேரிடர் நிதியில் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2116—23/2020/எச்1)**

**45.** கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட இடங்களில் மருத்துவ முகாம் அப்பகுதியில் அமைத்து, அப்பகுதி மக்களுக்கு மருத்துவ உதவி செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அரசு வழிகாட்டுதலின்படி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களின் நேரடி ஆய்வில் மருத்துவ முகாம் நடைபெறும் இடங்களில் சாமியானா பந்தல், டேபிள், சேர்கள் அமைத்து, பொதுமக்கள் முகாம் நடைபெறுவதை அறிந்து கொண்டு, பலனடைய விரிவான ஏற்பாடுகள் செய்ய அறிவுரை வழங்கியதால், மேற்படி வசதிகளை செய்து தருமாறு துப்புரவு ஆய்வர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

எனவே மருத்துவ முகாம் நடைபெறும் இடங்களில் சாமியானா பந்தல், டேபிள், சேர் அமைத்து தர வேண்டியுள்ளதால், இதற்காகும் தோராய செலவினம் ரூ.3,00,000/— (மூன்று இலட்சத்திற்கு) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி செலவினத்தை மாநில பேரிடர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி, தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்

**(2116—23/2020/எச்1)**

**46.** விழுப்புரம் நகராட்சியில் கொரோனா நோய் தொற்று பரவலாக உள்ள நிலையில் நகராட்சி பகுதிகளில் வீடு வீடாக காய்ச்சல், சளி , இருமல் கொரோனா அறிகுறிகள் கொண்ட நபர்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்றும், அப்பகுதிகளில் மருத்துவ முகாம் நடைபெறவும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுரை வழங்கியதற்கிணங்க அப்பணிக்கு DBC பணியாளர்களை பயன்படுத்தவும் என துப்புரவு ஆய்வர்கள் குறிப்பு சமர்ப்பித்துள்ளனர். அதனடிப்படையில் நகர் நல அலுவலர், சமுதாய அமைப்பாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வர்கள் கீழ்கண்ட மகளிர் சுய உதவிக்குழுவினர் மூலம் DBC பணி மேற்கொள்ள அறிவுரை வழங்கியதற்கிணங்க, பட்டியல் தொகை கோரியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1 | சரஸ்வதி மகளிர் சுய உதவிக்குழு, விழுப்புரம் **07.07.2020 முதல் 31.07.2020** வரை **40** நபர்கள் | **ரூ.1,95,800/—** |
| 2 | மல்லிகை மகளிர் சுய உதவிக்குழு, விழுப்புரம் **07.07.2020** முதல் **31.07.2020** வரை **43** நபர்கள் | **ரூ.2,11,475/—** |

மேற்கண்ட குழுவினர் நன்றாக பணி செய்துள்ளனர் என்றும் தொகையை வழங்கலாம் எனவும் துப்புரவு ஆய்வர்கள் சான்றளித்துள்ளனர்.

எனவே, மேற்கண்ட மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு பட்டியல் தொகை **ரூ.1,95,800/—** மற்றும் **ரூ.2,11,475/—** வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மழைக்காலம் வருவதால் DBC பணியாளர்களை மேலும் **3** மாதக்களுக்கு பயன்படுத்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.22.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம் மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொண்டும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( / 2020/எச்1)**

**47.** விழுப்புரம் நகராட்சியில் உள்ள 42 வார்டுகளில் 36690 குடியிருப்புகள் மற்றும் சுமார் 1.50 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். தற்போது மழைக்காலம் வருவதால், டெங்கு காய்ச்சல், மலேரியா ஏற்படுத்திடும் முதிர் கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (Mega Fog Vehicle Mounted) புதியதாக 1 எண்ணம் மற்றும் வீடுகளுக்கு புகை மருந்து அடிக்கும் Indoor Fogging இயந்திரம் 2 எண்ணம் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர்கள் குறிப்பு வழங்கியதற்கிணங்க விலைப்புள்ளி 13.08.2020 ல் கோரப்பட்டதில், கீழ்கண்ட விவரப்படி 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் விவரம் | Mega Vehicle mounted Fogging machine (1எண்ணம்) | Hand Indoor fogging Machine (1எண்ணம்) |
|---|---|---|---|
| 1 | SYSTEM ENGINEERING No.1 Annai Sathya Nagar Main Road,Senthamil Nagar, Ramapuram, Chennai-600089. | Rs.5,93,700.00 | Rs.72,600.00 |
| 2 | VIGNESHWARI INDUSTRIAL PRODUCT H-110L,Poonambalam Salai, K.K.Nagr, Chennai-600078. | Rs.5,97,000.00 | Rs.74,000.00 |
| 3 | S.N.ENTERPRISES, Plot No.6,Door No.1G,Rajaji Avenue,Valasaravakkam, Chennai-600087 | Rs.5,99,000.00 | Rs.73,500.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.SYSTEM ENGINEERING, No.1 Annai Sathya Nagar Main Road, Senthamil Nagar, Ramapuram, Chennai-600089 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.SYSTEM ENGINEERING , No.1 Annai Sathya Nagar Main Road, Senthamil Nagar, Ramapuram, Chennai-600089 என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும், மன்றம் அனுமதிக்கலாம். ( / 2020/எச்1)

**48.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கும் TN32-2651-JCB வாகனத்திற்கு கியர் பாக்ஸ், ஆயில் சர்வீஸ், பின்புஷ்கள் மற்றும் இதர பழுது நீக்கம் செய்திட இவ்வாகனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டைனாடெக், விழுப்புரம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கீழ்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது. மேலும் இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி எண் | தொகை |
|---|---|---|
| 1. | 1900151584 | ரூ. 1,83,075/– |
| 2. | 1900151585 | ரூ. 54,004/– |
| 3. | 1911551774 | ரூ. 36,500/– |
| | | ரூ 2,73,579/– |

**அலுவலக குறிப்பு:–**

பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**49.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12392/J2/2020 நாள்.21.08.2020–ன்படி "Prevention and control of Aedes Mosquitoes and fever Control Vector & Water Borne Diseases Alert & Highest Priority" என குறிப்பிட்டு டெங்கு மற்றும் மற்ற வியாதிகளையும் கட்டுக்குள் வைத்திருக்குமாறும், அதற்காக DBC பணியாளர்களை பயன்படுத்தி டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியையும், Covid-19 பணிகளோடு சேர்த்து பணியாற்ற தெரிவித்துள்ளார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜே1 நாள்.17.09.2018–ல் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவுவதை தடுக்கும் பொருட்டு, கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC Workers) ஒப்பந்த அடிப்படையில் Out Sourcing முறையில், நகராட்சி நிர்வாக அனுமதி வரம்பிற்கு உட்பட்டு பணியமர்த்தி கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது டெங்கு ஒழிப்பு பணியில் (DBC) மகளிர் சுயஉதவிக்குழு பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் காணோலி காட்சி ஆய்வுக் கூட்டத்திலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜே1, நாள்.17.09.2018–ன்படி DBC பணிக்கு Outsourcing முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியில் ஈடுபடுத்த வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

எனவே இந்நகராட்சிக்கு கீழ்க்கண்ட அளவுகோல்படி DBC பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

1. நகராட்சியில் உள்ள மொத்த குடியிருப்புகள் எண்ணிக்கை = 34,936
2. 300 குடும்பங்களுக்கு 1 DBC பணியாளர் வீதம் (34936/300) பணியாளர்கள் = 116

தற்போது DBC பணியாளர்களுக்கு ஊதியம் ரூ.289/– என மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.பிடி2/6191/2015 நாள்.19.08.2020ல் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

எனவே இந்நகராட்சிக்கு 116 DBC பணியாளர்களுக்கான நாளொன்றுக்கு ரூ.289/– வீதம் 60 வேலை நாட்களுக்கு ரூ.20,11,440/– வழங்கப்படவேண்டியுள்ளது.

எனவே மழைக்காலம் வரும் நிலையில் முதற்கட்டமாக 60 நாட்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.22 இலட்சத்திற்கும், மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஒப்பந்த காலம் முடிவுற்றப்பின் பணித்திறன் மதிப்பீடு செய்து தேவைப்படின், மீண்டும் மேலும் 60 நாட்களுக்கு நீட்டிப்பு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேலும் ஒப்பந்ததாரருக்கு நிர்வாக செலவினம் 5 சதவீதம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**